# RAWE Activity




International millet year 2023 celebration conducted in natchiyarpuram village of srivilliputhur block. Interaction with district collector Dr. Jayaseelan IAS.



RAWE Students attachment with Agro-Industries

# Modules for Skill development and Entrepreneurship



**Value addition in ornamental crops**



**Honey Bee Rearing**



Brooding chicks





**Commercial seed production of rice**



**Commercial sericulture**





# Extension Activity



Faculty interacted with School Children at Govt. primary school at Sidhamanayakanpatti Village



Faculty delivered a lecture on Integrated crop management in Sugarcane to farmers



Hands on training to farmers on Preparations of organic formulations

Students visits to various state and central research stations







ICRISAT


ICAR - IIOR

# RAWE students activities in daily newspapers

# சிறுதானிய சாகுபடி பயிற்சி



விருதுநகர், ஜூலை 28

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் சார்பாக தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ் விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடி சம்பந்தமான பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் டாக்டர் நிர்மலா, தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார். வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி, சிறுதானியத்தின் முக்கியத்துவம், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரம் பயன்பாடு மற்றும் விதை நேர்த்தி செய்தல் போன்றவை பற்றியும், வேளாண்மை அலுவலர் குருலட்சுமி, மானிய திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்கள். மேலும் பயிற்சியில் கலசலிங்கப் பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு விவசாயம் படிக்கும் மாணவர்கள் கலந்து கொண்டனர், பயிற்சிக்கான ஏற்பாட்டை உதவி வேளாண்மை அலுவலர் மகாராணி செய்திருந்தார்.

அக்ரி-டாக்டர் 29.7.2023 சனிக்கிழமை 17

---

தினகரன்

## திருவில்லிபுத்தூரில்

# சிறுதானிய சாகுபடி பயிற்சி முகாம்



திருவில்லிபுத்தூரில் நடைபெற்ற பயிற்சி முகாமில் வேளாண்மைதுறை அதிகாரி தனலட்சுமி பேசினார்.

திருவில்லிபுத்தூர், ஜூலை 29: திருவில்லிபுத்தூர் வட்டாரத்தில் வேளாண்மைத்துறையின் சார்பாக தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ் விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடி சம்பந்தமான பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் டாக்டர் விமலா ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் திருவில்லிபுத்தூர் பகுதி வேளாண்மை உதவி இயக்குனர் தனலட்சுமி சிறுதானியத்தின் முக்

பொது மக்களுக்கு தாங்கள் பயன்படுத்தும் உணவில் அதிகளவு சிறுதானியங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார். மேலும் பயிற்சியில் பங்கேற்ற மாணவிகள் சிறுதானியங்களை பற்றி எழுப்பிய சந்தேகங்களுக்கு விரிவாக பதிலளித்தும் பேசினார்.

இதனையடுத்து வேளாண்மை அலுவலர் குருலட்சுமி மானிய திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். பயிற்சியில் கலசலிங்கப் பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டு விவசாயம் படிக்கும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

---

# கலசலிங்கம் வேளாண்மை கல்லூரி மாணவிகளின் ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம்





விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டத்திலுள்ள தெற்கு தேவதானத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகம் மூலம் நடத்தப்பட்ட கரும்பு சாகுபடி மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தென்னை மர கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சியில் கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் வேளாண் பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரியும் முனைவர். ம.ஜெயந்தி மற்றும் முனைவர். இ.ரபீணா ஆகியோர் தலைமையின் கீழ் இராஜபாளையம் வட்டாரத்தில் ஊரக அனுபவ திட்டத்தின் கீழ் வேளாண் பயிலும் நான்காம் ஆண்டு மாணவிகள் சி.தர்ஷினி, ர.வினுப்பிரியா, ஆ.கவிபிரியா, வீ.வினிஷா, ஜான்வி ஜாக்குலின், தேவபிரபா, சி.திவ்யா, ஜெ.சக்தி உமா, பா.கோபிகா ஆகியோர் விவசாயிகளுக்கு இயற்கை விவசாயம், அமில கரைசல்கள், காண்டமிருக வண்டு பொறி ஆகியவற்றை உபயோகங்கள் பற்றியும் அவற்றை பயன்படுத்தும் முறைகளையும் விழிப்புணர்வு நடத்தினர். மேலும் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக இராஜபாளையம்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கபாண்டி அவர்கள் மற்றும் உதவி இயக்குனர் திரு. திருமலைசாமி அவர்கள் விழாவில் பங்கேற்று விழாவினை சிறப்பித்தனர்.

---



# கீழப்புலியூர் பகுதியில் நெல் நடவு இயந்திரம் செயல்முறை விளக்கம்

தென்காசி, ஜூலை.31–

தென்காசி அருகே உள்ள கீழப்புலியூர் கிராமத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் கல்லூரி மாணவர்களால் நெல் நடவு இயந்திரம் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கல்லூரி யின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண் துறை மாணவர்கள் சேத்தன் விஜய் கைக்வாட், ராஜ்கரன், ஸ்ரீ சரண், அர்ஜுன்குமார், ஜெகேஷ் சஞ்சீவ், அபினவ் பிள்ளை, மற்றும் பிரவீன் கிருஷ்ணா ரமேஷ் வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கிராம தங்கல் திட்டத்தில் தென்காசி பகுதியில் தங்கி விவசாயிகளை நேரில் சந்தித்து பல்வேறு ஆலோசனைகளையும் செயல்முறைகளையும் விளக்கமும் அளித்து வருகின்றனர்.

இம் மாணவர்கள் தென்காசி வேளாண் உதவி இயக்குனர், பாட ஆசிரியர் டாக்டர். ம. ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகரான மா. சதீஷ் குமார் ஆகியோரின் அறிவுரையின் படி, தென்காசி தாலுகா கீழப்புலியூர் கிராமத்தில் நெல் நடவு இயந்திரம் செயல்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது. இவ்விளக்கம் உதவி வேளாண்மை அலுவலர் பரமசிவம் முன்நிலையில் நடைபெற்றது. இந்த நெல் நாற்று நடும் இயந்திரம் விவசாய தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்கவும், நேர செலவைக் குறைக்கவும் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த செயல்முறை விளக்கத்தை கீழப்புலியூர் விவசாயிகள் ஏராளமானோர் கண்டு பயன் பெற்றனர்.

---

# வேளாண் கல்லூரி மாணவிகள்



விருதுநகர், ஆக.3

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரியின் வேளாண் துறை மாணவிகள் விஜய லெட்சுமி, அன்ஷிகா, தனலட்சுமி, தேவிகா ர பிஜு, ஸ்ரீ நந்தினி, ஏஞ்சல் ஜி வர்கீஸ், மினுமோல், பாரத லட்சுமி, லில்லி ஜாய்ஸ் ஆகியோர் தென்காசி மாவட்டம், கடையநல்லூர் சரகம், கரடிக்குளம் கிராமத்து விவசாயிகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர், பாட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ம.ஜெயந்தி, குழு ஆலோசகர் முனைவர் க.முத்துலெட்சுமி ஆகியோரின் அறிவுரையின் படி மத்திய மற்றும் மாநில அரசின் வேளாண் திட்டங்களை பற்றியும், அரசின் மானியங்கள் பற்றியும் அதில் விவசாயிகள் எவ்வாறு பயன்பெறுவது என்பதை பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி மேற்கொண்டனர். அதுமட்டுமின்றி விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் குறித்தும் நானோ யூரியா பயன்பாடுகள் குறித்தும் விளக்கம் அளித்தார்.

இந்நிகழ்ச்சியில் நூற்றிற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by M.J.Vasudevan,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.